1991 சனவரி 25]

பார்வையற்றோருக்கு வேலை வாய்ப்பு

* 5038—திரு. சு. குருநாதன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பார்வையற்றோருக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு ஆணை எண். 99, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 26—2—1988-ல் ஊனமுற்றோர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க ஒதுக்கப்பட்ட 3 சதவீதம் இடங்களில், 1 சதவீதம் கண் பார்வையற்றோருக்கு வேலை வாய்ப்பு அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி, கண் பார்வையற்றவர்கள் செய்யக்கூடிய பணிக்குத் தேவையான ஆட்கள், அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் நியமனம் செய்யப்படுகின்றனர்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டையில் இந்த ஆண்டு நூற்றாண்டு விழா கொண்டாடக்கூடிய விழி இழந்தோர் கல்லூரி உள்ளது. ஏராளமான மாணவர்கள் அதிலே படித்து பி.ஏ., எம்.ஏ., பட்டம் பெற்றிருக்கிறார்கள். ஏ.பி.யாக இருக்கக் கூடியவர்களும் இருக்கிறார்கள். நாற்காலி, சோபா பின்னக் கூடியவர்களும் இருக்கிறார்கள். பாளையங்கோட்டையில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் விழி இழந்தவர்களுக்குத் தகுதியான வேலை அதிகப்படியாகத் தர அரசு முன்வருமா? அவர்கள் போர்வை நெய்கிறார்கள். மற்றும் நாற்காலி பின்னுகிறார்கள். அந்த வேலைகளாவது அவர்களுக்குத் தரப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்த வரையில் சில குறிப்பிட்ட வேலை வாய்ப்புகளில் மட்டும் தான் விழி இழந்தோருக்கான வேலைகளைத் தர முடியும். குறிப்பாக வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் இயங்காத பகுதிகளில் மட்டும் தான் அவர்கள் பணியாற்ற முடியும். ஆகவே அவர்களுக்கு நாற்காலி பின்னுதல், பேருந்து இருக்கைகள்

தைத்தல், பேருந்து நிலையங்களில் அறிவிப்பாளராக இருத்தல், விசாரணைப் பிரிவுகளில் பதில் சொல்லுதல் போன்ற பணிகளில் மட்டுமே அவர்களைப் பயன்படுத்த முடியும். அப்படிப்பட்ட பணிகளில் இதுவரையில் 31 பேர் நிரந்தரப் பணியாளர்களாக, பல்வேறு போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். எங்கெங்கே அவர்களுக்குத் தகுதியான வேலை வாய்ப்புகள் ஏற்படுகிறதோ அந்த வேலை வாய்ப்புகள் அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. சில இடங்களில் அவர்கள் 4 பேர், 10 பேர் ஒன்றாகக்கூடி அவர்களால் இயன்ற பணியைக் கான்ட்ராக்ட் முறையில் எடுத்துக் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பணியாளர்களும் இன்றைக்குப் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு மேற்கொள்ளும் புதிய தடங்களைப் பொறுத்தவரையில், அதாவது தனியார் போக்குவரத்துக் கழகங்களை மேற்கொள்கிறபோது தனியார் துறையில் பணியாற்றுகிற உடல் ஊனமுற்ற தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்புக் கொடுக்கும் எண்ணம் அரசின் குறிப்பில் உண்டா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் போக்குவரத்துத் துறைகளை அரசு மேற்கொள்ளும்போது இந்தக் கருத்து பரிசீலிக்கப்படும்.

திரு. கு. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனமுற்றவர்களுக்காக ஒதுக்கப்பட்ட பணியிடங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்கள் அவர்கள் எந்தப் பணியில் நியமனம் செய்யப்பட்டார்களோ, அந்தப் பணியைச் சரிவரச் செய்ய முடியவில்லை என்று வேலையை விட்டு எடுத்துவிடுகிறார்களே, அப்படிப்பட்டவர்களுக்கு அந்தப் போக்குவரத்துக் கழகங்களில் மாற்று வேலைகளைக் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த பிரச்சனை பற்றி ஏற்கனவே அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு கை ஊனமுற்ற நபர் நடத்துனர் வேலைக்குத் தேர்வு செய்யப்பட்டு பணியிலே அமர்த்தப்பட்ட பிறகு அவரால் டிக்கெட் கொடுக்க இயலவில்லை என்ற காரணத்தாலே நிர்வாகத்தினர் அவரைப் பணியிலே இருந்து வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். இருந்தாலும் அப்படிப்பட்ட ஊனமுற்றவரால் எந்தப் பணியை அலுவலகத்திலே செய்ய முடியுமோ அவருடைய கல்விக்குத் தகுந்தாற்போல் மாற்றித் தருவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.